INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

# மொபைல் சாதனத்தில் (iOS) தகவல்களைக் சேமித்தல், மீட்டெடுத்தல் மற்றும் நீக்குதல்

கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து அறிவார்ந்த சாதனங்களை பயன்படுத்த கற்றுக்கொள்ளலாம்

GO.gov.sg




அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்

இதற்கான ஆதரவு
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

SMART NATION SINGAPORE

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகப்புரை | 2 |
| சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் | 3 |
| ஸ்கிரீன்ஷாட் எடுத்தல் | 4 |
| புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை மீட்டெடுத்தல் | 5 |
| புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை நீக்குதல் | 6 |
| இணையத்தளத்தைப் புத்தகக்குறி இடுதல் | 7 |
| புத்தகக்குறியை மீட்டெடுத்தல் | 8 |
| புத்தகக்குறியை நீக்குதல் | 9 |
| ஆவணத்தைச் சேமித்தல் | 11 |
| ஆவணத்தை மீட்டெடுத்தல் | 13 |
| ஆவணத்தை நீக்குதல் | 14 |




# முகப்புரை

வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்கள் (DSL) வழிகாட்டிப் புத்தகம் என்பது தினசரி வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும் சிற்றேடுகளின் தொகுப்பாகும். இது, டிஜிட்டல் உலகில் நீங்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியபடிப்படியான வழிமுறைகள் மற்றும் விரைவான உதவிக்குறிப்புகளைப் பற்றி விளக்குகிறது.

தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும் டிஜிட்டல் திறன்களை கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த DSL திறன்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி 5 திறன்களைக் கொண்ட பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

**கற்றல் விளைவுகள்:**
இந்த வழிகாட்டிக் கையேடு 'அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்' திறன் மீது கவனம் செலுத்துகின்றது, தில் நீங்கள் கற்றுக்கொள்வது:

- கற்கும் நபரால் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிக்கவும், மீட்டெடுக்கவும், நீக்கவும் இயலும்.




இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளில் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்


உங்கள் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிக்கும்போது, மீட்டெடுக்கும்போது மற்றும் நீக்கும்போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கவும்:




உங்கள் தனிப்பட்ட தகவலுக்கான அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க, கடவுக்குறியீடு, முக ஐடி அல்லது வடிவங்கள் (Android சாதனங்களுக்கு மட்டுமே பொருந்தும்) மூலம் **உங்கள் மொபைல் சாதனத்தைப் பூட்டிப் பாதுகாக்கவும்.**





அறியப்பட்ட பாதுகாப்புப் பாதிப்புகளில் இருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, புதுப்பிப்புகளைச் சரிபார்த்து, **உங்கள் செயலியை உடனடியாகப் புதுப்பிக்கவும்**.




**அதிகாரப்பூர்வ** ஆதாரங்களில் இருந்து செயலிகளைப் பதிவிறக்கவும்.

# ஸ்கிரீன்ஷாட் எடுத்தல்

புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட் எடுப்பது உங்கள் மொபைல் சாதனத்தில் தகவல்களைச் சேமிப்பதற்கான முறைகளில் ஒன்றாகும். பின்வரும் படிகள் உங்கள் மொபைல் சாதனத்தில் புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை சேமிக்கவும், மீட்டெடுக்கவும், நீக்கவும் உங்களுக்கு வழிகாட்டும்.





ஸ்கிரீன்ஷாட்டை எடுக்க இடதுபுறத்தில் உள்ள "**ஒலியளவை அதிகப்படுத்தும் பட்டனையும்**" வலதுபுறத்தில் உள்ள "**உறக்க/விழிப்பு பட்டனையும்**" ஒரே நேரத்தில் அழுத்தவும்.

# புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை மீட்டெடுத்தல்

**1** **Photos தேர்ந்தெடுக்கவும்**


"Photos" சின்னத்தைக் கண்டுபிடித்து தட்டவும்.

**2** **புகைப்படத் தொகுப்புக் ஸ்கிரீன்ஷாட்டைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் பார்க்க விரும்பும் கோப்புறையைத் தட்டவும்.

**3** **புகைப்படம்/ காணொளியைத் தேர்ந்தெடுக்கவும்**




நீங்கள் பார்க்க விரும்பும் புகைப்படம் அல்லது காணொளி சிறுபடத்தைத் தட்டவும்.


# புகைப்படம், காணொளி அல்லது ஸ்கிரீன்ஷாட்டை நீக்குதல்

**1** **Photos தேர்ந்தெடுக்கவும்**




**"Photos"** சின்னத்தைக் கண்டுபிடித்து தட்டவும்.

**2** **புகைப்படம் / காணொளி/ ஸ்கிரீன்ஷாட்டைத் தேர்ந்தெடுக்கவும்**





**"Library"** என்பதைத் தட்டி, நீக்க விரும்பும் புகைப்படம் அல்லது காணொளியைத் தேர்ந்தெடுக்கவும்.

**3** **புகைப்படம்/ காணொளி / ஸ்கிரீன்ஷாட்டை நீக்கவும்**




**4** **Delete Photo என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**



# இணையத்தளத்தைப் புத்தகக்குறி Bookmark இடுதல்


இணையத்தில் உலாவும்போது நீங்கள் மீண்டும் பார்க்க விரும்பும் இணையத்தளத்தை நீங்கள் கண்டால், அதை புக்மார்க் செய்யலாம். பின்வரும் படிகள் இணையத்தளத்தைப் புக்மார்க் செய்யவும், புக்மார்க்கை மீட்டெடுக்கவும், உங்களுக்கு இனி தேவையில்லாத பட்சத்தில் அதை நீக்கவும் உங்களுக்கு வழிகாட்டும்.

## 1 Safari என்பதைத் தேர்ந்தெடுக்கவும்

**"Safari"** சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.


## 2 புத்தகக்குறியைச் சேர்க்கவும்

A




நீங்கள் விரும்பும் இணையத்தளத்திற்குச் சென்று, **"பகிருக"** என்ற சின்னத்தைத் தட்டவும்.

B





**"Add Bookmark"** என்பதைத் தட்டி, **"Save"** என்பதைத் தட்டவும்.

# புத்தகக்குறியை மீட்டெடுத்தல்


**1** **Safari என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**

"Safari" சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** **புத்தகக்குறி சின்னத்தைத் தட்டவும்**




**3** **இணையத்தளத்தைத் தேர்ந்தெடுக்கவும்**




புத்தகக்குறிகள் தாவலில், இணையத்தளத்திற்குச் செல்ல புத்தகக்குறி என்பதைத் தட்டவும்.


# புத்தகக்குறியை நீக்குதல்

**1** **Safari என்பதைத் தேர்ந்தெடுக்கவும்**




"Safari" சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.


**2** **புத்தகக்குறி சின்னத்தைத் தட்டவும்**





**3** **Edit என்பதைத் தட்டவும்**





**4** **மைனஸ் சின்னத்தைத் தட்டவும்**



**5** Delete என்பதைத் தட்டவும்





**6** Done என்பதைத் தட்டவும்



# ஆவணத்தைச் சேமித்தல்


மின்னஞ்சல்கள் அல்லது உடனடிச் செய்திகள் மூலம் ஆவணங்களை இணைப்புகளாகப் பெறும்போது, அவற்றைக் கண்டறிய உங்கள் மின்னஞ்சல்கள் அல்லது உடனடிச் செய்திகள் மூலம் தேட வேண்டிய அவசியமின்றி அவற்றை எளிதாக மீட்டெடுப்பதற்காக உங்கள் மொபைல் சாதனத்தில் சேமிக்கலாம். உங்கள் மொபைல் சாதனத்தில் ஆவணத்தைச் சேமிக்க, மீட்டெடுக்க மற்றும் நீக்க பின்வரும் படிகள் உங்களுக்கு வழிகாட்டும்.

## 1 ஆவணத்தைத் திறக்கவும்





நீங்கள் சேமிக்க விரும்பும் ஆவணத்தைத் திறக்கவும்.

## 2 பகிருக சின்னத்தைத் தட்டவும்





## 3 கோப்புகளில் சேமிக்கவும்





"Save to Files" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## 4 சேமிக்கும் இடத்தைத் தேர்வு செய்யவும்




நீங்கள் சேமிக்க விரும்பும் ஆவணத்தைத் தேர்வு செய்யவும்.

## 5 கோப்பைச் சேமிக்கவும்




**"Save"** என்பதைத் தட்டவும்.


# ஆவணத்தை மீட்டெடுத்தல்

## 1 Files என்பதைத் தேர்ந்தெடுக்கவும்




"**Files**" சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

## 2 கோப்பைத் தேடுங்கள்





"**Browse**" என்பதைத் தட்டவும், பின்னர் தேடல் பட்டியில் தேடவும் அல்லது கோப்பைக் கண்டுபிடிக்க "**Locations**" என்பவற்றில் உள்ள ஒன்றின் மீது தட்டவும்.

## 3 கோப்புறையைத் தேர்ந்தெடுக்கவும்




## 4 கோப்பை மீட்டெடுக்கவும்




நீங்கள் பார்க்க விரும்பும் கோப்பைத் தேர்ந்தெடுக்கவும்.


# ஆவணத்தை நீக்குதல்

**1** Files என்பதைத் தேர்ந்தெடுக்கவும்




"Files"சின்னத்தைக் கண்டுபிடித்துத் தட்டவும்.

**2** கோப்பைத் தேடவும்





"Browse" என்பதைத் தட்டி, "On My iPhone" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**2** கோப்பை நீக்குவதற்கு, அதைத் தட்டிப் பிடிக்கவும்




**3** Delete என்பதைத் தேர்ந்தெடுக்கவும்



**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**கருத்தைத் தெரிவியுங்கள்:**
go.gov.sg/imda-feedback
**இணையத்தளம்:**
digitalforlife.gov.sg

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து வாழ்நாள் மின்னிலக்கமயத்திற்க்கு செல்லவும்**

© 2026 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.